# வல்வெட்டித்துறை நகரசபை

## அறுபத்தி மூன்றாவது சபை அமர்வு – 17.02.2023

நகர சபையின் அறுபத்தி மூன்றாவது அமர்வு சபை மண்டபத்தில் **17.02.2023 வெள்ளிக்கிழமை மு.ப 9.30** மணியளவில் தவிசாளர் திரு.இ.சுரேன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு சமூகமளித்தோர்.

1. திரு.செந்திவேல் தமிழினியன் - கௌரவ உறுப்பினர்.
2. திரு.தங்கவேலாயுதம் சுந்தரலிங்கம் - கௌரவ உபதவிசாளர்.
3. திரு.இராமச்சந்திரன் சுரேன் - கௌரவ தவிசாளர்.
4. திரு.குகதாஸ் கமலதாஸ் - கௌரவ உறுப்பினர்.
5. திரு.முருகுப்பிள்ளை ஆனந்தராசா - கௌரவ உறுப்பினர்.
6. திரு.சண்முகம்பிள்ளை சண்முகதாஸ் - கௌரவ உறுப்பினர்.
7. திருமதி சுந்தரேஸ்வரி கவிஞன் - கௌரவ உறுப்பினர்.
8. திரு.மகாலிங்கம் மயூரன் கௌரவ உறுப்பினர்.
9. திரு.சபாரத்தினம் செல்வேந்திரா - கௌரவ உறுப்பினர்.
10. திரு.அருமைரத்தினம் சதீஸ்வரன் - கௌரவ உறுப்பினர்
11. திரு.பாலச்சந்திரன் ஜெகன் - கௌரவ உறுப்பினர்.
12. திரு.துரைராசா ஸ்ரீதரன் - கௌரவ உறுப்பினர்.
13. திரு.ஆறுமுகம் ஞானேந்திரன் - கௌரவ உறுப்பினர்.
14. திரு.கந்தசாமி சதீஸ் - கௌரவ உறுப்பினர்.
15. திருமதி.இராஜேஸ்வரி குணரத்தினம் - கௌரவ உறுப்பினர்.
16. திருமதி.இந்திரன் கைலாஜினி - கௌரவ உறுப்பினர்.
17. திருமதி.அன்ரநற் சுபாசினி இமானுவல் சிறில் ஜெயராசா - கௌரவ உறுப்பினர்.

மௌன வணக்கத்துடன் சபை அமர்வை ஆரம்பித்த தவிசாளர், முதலில் சென்ற கூட்ட அறிக்கைகளை அங்கீகரிப்பதில், 18.01.2023 ஆந் திகதி நடைபெற்ற 62 ஆவது சபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் சபையை கேட்டுக்கொண்டார். பின்வரும் திருத்தங்களுடன் கூட்டக்குறிப்பானது உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் முன்மொழிய உறுப்பினர் திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிய சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**திருத்தம்** 1 : 2வது பக்கத்தில் 3ஆம் பந்தியில் ''ஆதிகோவிலடி வீதியில் கருவாடு காயப்போடுவதால் வீதிப்போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பது குறித்து வருமானவரி பரிசோதகருடன் இணைந்து நான் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன்'' என தம்மால் குறிப்பிடப்பட்ட விடயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற உறுப்பினர் திரு.த.சுந்தரலிங்கம் அவர்களின் கோரிக்கை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**அடுத்**து தவிசாளரின் விசேட அறிவித்தலில் உலகுடைய பிள்ளையார் கோவிலடியிலுள்ள இலட்சுமி வளவு பிரச்சனையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தினையே நடைமுறைப்படுத்தலாமென சென்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதனடிப்படையில் காணி உரிமையாளருக்கு குறித்த காணியினை நன்கொடையாகவோ அன்றி விலைக்கோ தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டமைக்கு அவர் (திரு.பாலசுப்ரமணியம் பிரசாத்) அப்பாதைக்குரிய காணியினை நகரசபைக்கு நன்கொடையாகவோ அல்லது விலைக்கோ வழங்க விரும்பவில்லை என பதில் கடிதம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டது.

நகராட்சி மன்றத்தினால் வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தையினை ஒழுங்குபடுத்தல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு எதிராக திரு.வி.சுமதீஸ்வரனால் (வியாபாரி) முறைப்பாட்டுக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் தனியே சந்தைப் பிரச்சனை மாத்திரமின்றி சபைச்செயற்பாடு தொடர்பான பிரச்சனைகள், அரசியல் பிரச்சனைகள் என எல்லாவற்றையுமே குறிப்பிட்டுள்ளார். குறித்த நபர் நகரசபையின் சட்டத்திற்கு கட்டுப்படாவிடின் கட்டுப்படாமைக்கு எதிரான நடவடிக்கையினை நாம் முன்னெடுக்க வேண்டுமென தவிசாளரால் குறிப்பிடப்பட்ட போது, ஏற்கனவே 2018 ஆம் ஆண்டு குறித்த நபருக்கு எதிராக இடப்பட்ட வழக்கின் நீதிமன்ற நடைமுறை யாதென உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸால் வினாவப்பட்டதுடன், அவ்வழக்கின்

தீர்ப்பு யாதென உறுப்பினர் திரு.ம.மயூரனாலும் வினாவப்பட்டது. தற்போதைய சபை பதவியேற்ற பின் நகரசபை குறித்த நபருடன் நடாத்திய கலந்துரையாடலின் படி இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாக நீதிமன்றத்தில் வெளிப்படுத்தி வழக்கினை முடிவுறுத்துவதாக தீர்மானிக்கப்பட்டு அதன்படி வழக்கு முடிவுறுத்தப்பட்டது என தவிசாளரால் குறிப்பிடப்பட்டது. வழக்கின் தீர்ப்பு உள்ளதா என உறுப்பினர் திரு.ம.மயூரனால் வினாவப்பட்டதற்கு நீதிமன்றத்தில் சமரச புரிந்துணர்வில் வழக்கிலிருந்து விலகியமையால் தீர்ப்பு எம்மிடம் இல்லை என தவிசாளரால் பதிலளிக்கப்பட்டது. சமரசம் என்றாலும் என்ன நிபந்தனையின் கீழ் சமரசத்திற்கு உடன்பட்டீர்கள் என மயூரனால் வினாவப்பட்டது. நிபந்தனை என எதுவும் இல்லை தற்காலிகமாக கொட்டகை அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதென தவிசாளரால் பதிலளிக்கப்பட்டது.

ஏதோ ஒரு ஒப்பந்த அடிப்படையிலேயே நீதிமன்றத்தில் சமாதானமாக விலகியிருப்பீர்கள். எனவே வழக்கின் தீர்ப்பின் பிரதியினை நாம் பெற்றாலே அதனை தெரிந்து கொள்ள முடியுமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் குறிப்பிடப்பட்டது. குறித்த பிரச்சனை தொடர்பாக கோவையில் ஆவணங்கள் ஏதாவது உள்ளதா? என உறுப்பினர் திரு.ம.மயூரனால் வினாவப்பட்டமைக்கு தற்போதுள்ள கோவையில் தற்காலிக கொட்டகையினை அகற்றுமாறு அனுப்பிய கடிதம் மாத்திரமே உள்ளதென தவிசாளரால் பதிலளிக்கப்பட்டது.

இவ்வழக்கு நடைபெற்ற காலப்பகுதியில் நான் இருக்கவில்லை, இவ்விடயம் தொடர்பாக எனக்கு தெரியாது ஆனால் நீதிமன்றத்தில் தீர்ப்பு எடுக்கப்பட்டிருந்தால் அத்தீர்ப்பினை மீறி நகரசபை செயற்படமுடியாது. அவ்வாறு செயற்படுவீர்களாயின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் எனக்கு அதில் உடன்பாடு இல்லை. நீதிமன்ற அவமதிப்பு வழக்காக அமையுமென்பதால் நான் இதிலிருந்து விலகிக்கொள்கின்றேன். ஏனையவர்களுடன் கதைத்து முடிவெடுங்களென உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டமையைத் தொடர்ந்து தாமும் இக்கருத்துடன் உடன்படுவதாக உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸால் குறிப்பிடப்பட்டது.

சந்தையில் வாழைப்பழக்கடைக்காரர் நினைத்த இடத்திற்கு நகர்த்துவதாக உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸால் குறிப்பிடப்பட்டதற்கு நகரசபை கேட்டுக்கொண்டமைக்கு அமையவே, எம் அறிவுறுத்தல் பிரகாரம் வாழைப்பழக்கடைக்காரர் கடையை பின்னுக்கு நகர்த்தி அமைத்தார். ஆனால் தற்காலிக கொட்டகைக்காரர் தாம் நினைத்த நேரத்தில் கடையை மூடி திறப்பதனால் சந்தைக்கு வெளியே இருந்து பார்க்கின்ற போது, பழக்கடை முற்று முழுதாக மறைக்கப்படுகின்றது அதனாலேயே அவர் தன்னுடைய இடத்தை மாற்றிக் கொண்டார், என தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

சந்தையை ஒழுங்குபடுத்தல் என்பது நகரசபையின் நடைமுறையாகும். ஆனால் குறித்த சிலர் சந்தையை தமது கட்டுப்பாட்டை மீறி நகரசபை எதுவுமே செய்யமுடியாது என்ற நிலையில் வைத்திருக்கிறார்கள். தற்காலிக கொட்டகைக்கு அனுமதி வழங்கியது பிரச்சனையாக அமைந்து விட்டது. ஆறு மணிக்கு மூட வேண்டிய கடையை நான்கு மணிக்கே மூடுகிறார்கள். இதனால் பழக்கடைக்காரனுக்கு வியாபாரம் எவ்வாறு நடைபெறும்? இவ்விடயத்தில் யாரும் யாருக்கும் சார்பாக கதைக்காமல் சந்தையை ஒரு ஒழுங்கிற்கு கொண்டுவர பாருங்கள் என உறுப்பினர் திரு.பா.ஜெகனால் குறிப்பிடப்பட்டது.

சந்தையில் ஏனைய வியாபாரிகள் இடங்கள் மாறி இருப்பதனை தாங்கள் அவதானிக்கவில்லையா? என உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸ் குறிப்பிட்டதற்கு அதன் காரணமாகவே சந்தையை ஒழுங்குபடுத்த வேண்டுமென குறிப்பிடுகின்றேன் என தவிசாளரால் கூறப்பட்டது. சந்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம் உங்களுக்கு உள்ளது. சந்தையில் பிரச்சனை எனும்போது நீங்கள் தனிப்பட்ட ரீதியில் முரண்பட்டு தீர்மானம் வழங்க வேண்டாம். சபையில் ஆலோசித்து முடிவெடுங்கள். இது சிறிய பிரச்சனை இல்லை என உறுப்பினர் திரு.ம.மயூரனால் கூறப்பட்டமைக்கு அதன் காரணமாகவே இவ்விடயத்தை சபையின் ஆலோசனைக்கு கொண்டு வந்தேன் என தவிசாளரால் கூறப்பட்டது.

சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம் சபைக்கு உண்டு. இருப்பினும் முன்னாள் தவிசாளர் கருணானந்தராசா இருந்த காலத்தில் ஒரு ஒப்பந்த அடிப்படையில் நீதிமன்றத்தில் சமரசத்திற்கு வந்தார்கள். அவ் ஒப்பந்தத்திற்கு எதிராக நாம் செயற்பட முடியாது. அதற்கான ஆவணங்கள் எம்மிடம் இல்லையெனின் நீதிமன்றத்திடமிருந்து தீர்ப்பு பிரதியினை பெற்றுக்கொள்ளுங்கள் அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை நாம் அறிய வேண்டுமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் கூறப்பட்டது.

நகரசபை சட்ட ஒழுங்கு விதிப்படி சந்தைக்குள் கொட்டகை அனுமதி வழங்கியதே தவறானதாகுமென தவிசாளர் குறிப்பிட்டதற்கு அனுமதி கொடுத்த பிற்பாடு அந்த விடயங்களை கதைத்து பயனில்லை என உறுப்பினர் திரு.ம.மயூரனால் கூறப்பட்டது. ஒரு பொதுச்சந்தையில் இரண்டு மரக்கறி வியாபாரிகள் மாத்திரம் வியாபாரத்திலீடுபடுவதும் ஏனைய வியாபாரிகள் அங்கு வராமலிருப்பதற்கும் அங்கு ஒழுங்குபடுத்தல் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையே காரணமாகும். அதனை நடைமுறைப்படுத்துவது பிரச்சனை எனின் அதனை கைவிட்டு விடுவோமென தவிசாளரால் குறிப்பிடப்பட்டமைக்கு சந்தையை ஒழுங்குபடுத்த வேண்டாமென குறிப்பிடவில்லை

நீதிமன்றத்தில் ஏதாவது காரணம் குறிப்பிடப்பட்டு சமரச அடிப்படையில் வழக்கு முடிவுறுத்தப்பட்டிருந்தால் அதனை மீறக்கூடாது என்ற நோக்கம் கருதியே குறிப்பிடுகின்றேன் என உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் குறிப்பிடப்பட்டது.

சந்தையிலுள்ள மூன்று வியாபாரிகளையும் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கலாமென உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டதற்கு நான் மற்றும் உறுப்பினர்கள் ஆனந்தராசா, ஜெகன் ஆகயோர் அவர்களுடன் கலந்துரையாடிய போது உடன்பட்டவர்கள் பின்பு அதற்கு மாறாகவே செயற்பட்டார்கள். தற்போது அங்குள்ள கொட்டகையினை அகற்றி தனியே மரக்கறிக்கடை, பழக்கடை, தேங்காய் என் பிரித்து கொடுத்தாலே ஏனைய வியாபாரிகள் அங்கு வியாபாரம் செய்ய வரத் தயாராக உள்ளனர். ஆனால் அங்கு இரண்டு வியாபாரிகள் சந்தையின் வாயிலை மறித்து வியாபாரத்திலீடுபடுவதனாலும் சந்தைக்கு வருகின்ற பொதுமக்களை தம்மிடம் மாத்திரமே பொருட்களை வாங்க செய்வதற்கு கட்டாயப்படுத்துவதாலும் ஏனைய வியாபாரிகள் சந்தைக்கு வர விரும்பாத நிலை காணப்படுகின்றது என தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பு பிரதி எடுக்கப்பட வேண்டுமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் மீளமீள வலியுறுத்தப்பட்டது. வழக்கிலிருந்து விலகிக்கொள்ளும் போது எத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்பட்டது என்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென உறுப்பினர் திரு.ம.மயூரனாலும் கூறப்பட்ட போது, இவ்விடயம் தொடர்பாக போதிய ஆவணங்கள் உரிய கோவையில் இல்லை எனவும் குறித்த வியாபாரியுடன் 01.06.2018 இல் நடைபெற்ற கலந்துரையாடலின் அறிக்கை காணப்படுவதாகவும், அதில் நகரசபை பக்கச் சார்பாக செயற்படுவதாகவும், வெவ்வேறு நோக்கம் கருதி தனக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும், தனது பக்க நியாயத்தை வியாபாரி வெளிப்படுத்தி இருப்பதுடன், குறித்த வியாபாரியின் கோரிக்கைப்படி தற்காலிக கொட்டகை தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை எவருக்கும் இடையூறு இன்றி ஏற்படுத்திக் கொள்வதெனவும், நடைபெறவுள்ள வழக்கு தவணையின் போது இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாக வெளிப்படுத்தி வழக்கினை முடிவுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

நான் உங்களை நடவடிக்கை எடுக்க வேண்டாமென கூறவில்லை. நீதிமன்ற வழக்கு பிரதியைப் பெற்று அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ அதன்படி செயற்படுங்கள் இல்லையெனின் பொது நடவடிக்கை எடுப்பதாயின் அத்தீர்ப்பிற்கு பாதகமில்லாமல் செயற்படுங்கள் என்றே குறிப்பிடுகின்றேன் என உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டமையினை சபை ஏற்றுக்கொண்டு குறித்த வழக்குப் பிரதியினை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்வதெனவும் அதன் நிபந்தனைகளை பார்வையிட்டபின் அதற்கு பாதகமில்லாமல் தொடர் நடவடிக்கை எடுப்பதெனவும், சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் கடந்த காலங்களில் ஆதனவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை ஆதன உரிமையாளர் அல்லாத வேறு நபர்கள் பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பதனால் ஏற்படுகின்ற மோசடிகளை தவிர்ப்பதற்காக ஆதன உரிமையாளர் மற்றும் உரிய ஆதனத்திற்கான பதிவு செய்யப்பட்ட அற்றோனிக் தத்துவம் ஆகியோர் மாத்திரம் பற்றுச்சீட்டின் பிரதிகளை பெற்றுக்கொள்ள அனுமதியளிப்பதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு CDLG திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 200,000.00 இல் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே சபை அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் தற்போது பொருட்கள் சேவைகளின் Rate இல் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையினால் குறித்த நிதி ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக தேவைப்பட்ட ஏறத்தாழ ரூபா 55,000.00 அளவிலான நிதியினை சபை நிதியில் வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து 2023 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சபைநிதியினூடாக உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசா அவர்கள் தமது சுய விருப்பின் அடிப்படையில் தம்மால் முன்மொழியப்பட்ட சிவபுர வீதி நடைபாதை அமைத்தல் வேலைத்திட்டத்தினை மாற்றி பழைய ஆஸ்பத்திரி வீதியில் கழிவுநீர் தேங்கி நிற்காது வழிந்தோடக்கூடியவாறு வடிகால் நீர் அமைப்பினை அமைக்க பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து 2021 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஒதுக்க செயற்றிட்டமான கந்தசாமி கோயில் ஒழுங்கை வீதி புனரமைப்பு மற்றும் வடிகாலமைப்பினை முழுமையாக நிறைவேற்றுவதற்கு மேலதிகமாக தேவைப்படுகின்ற ரூபா 50,000.00 இனை தவிசாளர் திரு.இ.சுரேனுடைய சுயவிருப்பின்

அடிப்படையில் இவ்வருடத்திற்கான அவரது சபை நிதி வேலையிலிருந்து மாற்றம் செய்ய அனுமதிப்பதென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை அஞ்சலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதுடன் கட்டட உரிமையாளர் கோருகின்ற போது தற்போது இருக்கின்ற கட்டடத்திலிருந்து இடம்மாற வேண்டிய நிலை தோன்றுமாயின் அதனால் அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களும் அவர்களது சேவையினைப் பெறுகின்ற மக்களும் அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும் என்பதனால் நகராட்சிமன்றத்தினுள் நிரந்தர கட்டடமொன்றினை வழங்க கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டமை சாதகமாக பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான கட்டடம் கிடைக்கின்ற பட்சத்திலோ அன்றி நிலக்கொள்வனவு நகரசபையினால் செய்யப்படும் போது, அவர்களுக்கு அதனை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

UNDP – CDLG செயற் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகின்ற **FTTH Connection** இனை வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு பெற்றுக்கொண்டமைக்கான தழுவல் அனுமதியை வழங்குவதுடன் CDLG திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக தேவைப்படுத்தப்படும் நிதியினை எமது சபை நிதியிலிருந்து கொடுப்பனவு செய்ய அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து **15.02.2023** ஆந் திகதி நடைபெற்ற **நிதிக்குழுக் கூட்ட சிபார்சுகள்** ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிதிக்குழுக்கூட்ட அறிக்கைகளை WhatsApp பாவனை இல்லாதவர்களுக்கு அச்சிட்டு வழங்குமாறு உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்ட போது உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவால் தமக்கு அறிக்கையினை அச்சிட்டு வழங்குமாறு கேட்கப்பட்டது. அந்தவகையில் இனிவரும் காலங்களில் whatsApp பாவனை இல்லாதவர்களுக்கு நித்க்குழுக் கூட்ட சிபார்சுகளை அச்சிட்டு வழங்கப்படுமென தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

அடுத்து **சபைக்கு அறிவிக்க வேண்டிய விடயங்கள்** தொடர்பில் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு தேவையான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **பிற விடயங்கள்** தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- வல்வெட்டி மல்லியோடை வீதியினை சுகந்தன் வீதியென பெயர்மாற்றி வரும்வரை பழைய பெயர் பலகையினை பொருத்துமாறும் பெயர் மாற்றி வந்த பிற்பாடு “ இதுவரை மல்லியோடை என்ற பெயரில் இருந்த இவ்வீதியானது இனி சுகந்தன் வீதியென பெயர்மாற்றப்பட்டுள்ளதென ஒரு அறிவித்தலை வழங்கி பெயரை மாற்றம் செய்யலாமென உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டது.

- நகரசபையால் வெள்ளிக்கிழமைகளில் வாழைக்குற்றி மற்றும் வாழைக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக குறித்த தினத்தில் அகற்ற தவறுகின்ற போது, அதற்கு அடுத்த தினம் அகற்ற வேண்டும். அக்கழிவுகளை வீதியில் இடுவதால் நாய்,ஆடு, மாடுகள் அசுத்தம் செய்கின்றன. மற்றைய கழிவகற்றல்கள் சரியாக நடைபெறுகின்ற போது, இதில் மாத்திரம் எதற்காக சீரற்ற செயற்பாடு நிலவுகின்றதென உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டமைக்கு கரவெட்டி பிரதேச சபைக்குரிய கழிவுகளும் அங்கு வைக்கப்படுகின்றன அதனால் அதிகளவு கழிவுகள் சேர்வதாக சுகாதார ஊழியர்களால் அடிக்கடி முறைப்பாடு செய்யப்படுகின்றது என செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.
  அப்பிரதேச மக்கள் எந்த சபைக்கு வரி செலுத்துகிறார்களோ அந்த சபையே கழிவகற்றலையும் செய்ய வேண்டும். இதனை நான் பொதுவாகவே குறிப்பிடுகின்றேன் என உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டது. அதற்கு பொதுவாக குறிப்பிடாது தனிப்பட்ட கருத்துக்களை மாத்திரம் பதிவு செய்யுங்கள் என உறுப்பினர் மயூரனிடம் கோரியதோடு, அருகிலுள்ள சபையின் கழிவுகளை எடுக்க மறுக்கின்றீர்கள் ஆனால் அங்குள்ள கொல்களத்தினை பயன்படுத்துகின்றீர்கள். பொதுவாக கருத்துக்களை முன்வைப்பதென்றால் ஆதிகோவிலடி சந்தை பிரச்சனை தற்போது எவ்வளவு காலமாக நடைபெற்று வருகின்றது. அதில் யாராவது தலையிட்டுள்ளீர்களா? நான் அப்பிரச்சனையினை அடிக்கடி கதைப்பதனால் அப்பகுதிக்குள் செல்வதில்லை. என தொடர்ந்து உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது, குறித்த வாழைக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.
- முன்னாள் தவிசாளர் திரு கருணானந்தராசா அவர்கள் இருந்த காலத்திலிருந்தே குறிப்பிடுகின்றேன் ஆதிகோவிலடியில் 3,4 மின்கம்பங்கள் மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தால் குறிப்பிடப்பட்டதற்கு எந்தெந்த மின்கம்பங்கள் என்பதனை எழுத்து மூலம் தருமாறும் அதனை தாம் CEB இற்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாகவும் தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

- வீதி விளக்குகள் கடந்த மாதத்தில் வழங்கப்பட்ட விபரம் மற்றும், கையிருப்பு என்பவை தொடர்பாக குறிப்பிட முடியுமா என உறுப்பினர் திரு.ம.மயூரனால் கோரப்பட்டமைக்கு வழங்கப்பட்ட திகதி வாரியாக தவிசாளரால் விபரம் வழங்கப்பட்டது.
- மயிலியதனை மயானக் கொட்டகையானது காற்றினால் தூக்கி எறியப்பட்டமை நகரசபையால் சீர்செய்யப்பட்டிருப்பினும் அவை முழுமையாக செய்யப்படவில்லை. அதனை பூரணமாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டது.
- வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் உள்ள மயானங்களுக்கு உடனடியாக மயானக்குழுக்களை அமைக்க வேண்டுமெனவும், அதற்கு அப்பிரதேச மக்கள், பொது அமைப்புக்கள், கிராம சேவகர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு குறித்த குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் குறிப்பிடப்பட்டது.

இறுதியாக தவிசாளரின் நன்றியுடன் முற்பகல் 10.55 மணியளவில் சபை அமர்வு நிறைவுபெற்றது.

**தீர்மான இல :- 1276/17.02.2023**

**ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | 01 | பொது முகாமையாளர், MPCS, பருத்தித்துறை | 2023 தை மாதம் சபை வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 185,425.00 |
| 02 | 02 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் 2023 தை (01.01.2023 – 31.01.2023) மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 174,200.00 |
| 03 | 03 | ஜ.பிரசாந்தி | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 04 | 04 | மு.சுஜாதா | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 05 | 05 | அ.ரோகினி | இடர்கடன் வழங்கும் வகையில் | 203,200.00 |
| 06 | 06 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் 2023 மாசி (01.02.2023 – 28.02.2023) மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 172,000.00 |
| 07 | 07 | Kestrel Service (PVT) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான தை 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 187,381.05 |
| 08 | 08 | Kestrel Service (PVT) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான மாசி 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 169,247.40 |
| 09 | 09 | ஆர்.நந்தகுமாரும் மறுபேரும் | 38 அலுவலர்களுக்கான சீருடை கொடுப்பனவு வழங்கும் வகையில் | 185,000.00 |
| 10 | 10 | Andra | LDSP திட்டத்தின் கீழ் PT2 நிதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்தியமைக்கான | 1,102,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | |
| 11 | 11 | வாணி படிப்பகம் | தீருவில் பூங்கா Bench அமைத்தல் வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 296,783.64 |
| 12 | 12 | கணபதி படிப்பகம் | மயிலியதனை 3 ஆம் ஒழுங்கை வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 247,918.05 |

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :- 1277/17.02.2023**

**ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | January 03 | ஐ.பிரசாந்தி | எமது நகராட்சி மன்றத்தின் 4 ஆம் காலாண்டிற்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்கான உபசரணைச்செலவிற்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் | 2,640.00 |
| 2 | January 04 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | எமது அலுவலக சில்லறைச் செலவீனங்களுக்கான முற்பணம் பெற்றுக்கொள்ளும் வகையில் | 5,000.00 |
| 3 | January 05 | சி.சக்திவேல் | 2023 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தை குத்தகை கோரலில் வைப்பாக செலுத்திய தொகையினை மீளளிக்கும் வகையில் | 3,000.00 |
| 4 | January 06 | த.தங்கராசா | 2021 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடையினை வாடகைக்கு பெற்று கேள்வி வைப்பாக செலுத்திய தொகையினை மீளளிக்கும் வகையில் | 5,000.00 |
| 5 | January 07 | Murali Building & Civil Construction | 1. நெற்கொழு 3 ஆம் ஒழுங்கை வேலைக்கான செயலாற்றுகை முறி மீளளிக்கும் வகையில் - 2,300.00<br>2. புதுவளவு வீதி வேலைக்கான செயலாற்றுகை முறி மீளளிக்கும் வகையில் - 2,200.00<br>3. சமத்தனை 4 ஆம் ஒழுங்கை வேலைக்கான செயலாற்றுகை முறி மீளளிக்கும் வகையில் - 5,850.00 | 10,350.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | January 08 | இ.சுரேனும் மறுபேரும் | தவிசாளர், துணைத்தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான 2023 தை மாதத்திற்குரிய தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 25,500.00 |
| 7 | January 09 | நி.தர்சினி (செயலாளர்) | அலுவலக உபயோகத்திற்காக 2023 ஆம் ஆண்டிற்குரிய மாகாண விலைநிர்ணய புத்தகத்தினை பெற்றுக்கொண்டமைக்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் | 2,200.00 |
| 8 | January 10 | முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 2023 தை மாதத்திற்கான பஸ்தரிப்பட நீர்ப்பாவனைக்கான நீர்வழங்கல் பட்டியல் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 1,161.50 |
| 9 | January 15 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 1. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலத்திரனியல் முறையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் பெற்றுக்கொள்வதற்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>• ச.ஜனனி - 860.00<br>• ஜெ.மேகவண்ணன் - 1000.<br>2. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலில் பங்கு பற்றியமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>• மு.பிறேம்யா - 870.00<br>• கு.ஜெபறொபேக்கா – 880.00<br>• அ.வினோதிகா – 900.00 | 4,510.00 |
| 10 | January 16 | முகாமையாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம் | நகராட்சி மன்றப் பிரிவுகளின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான தொலைபேசிப்பட்டியல் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>0212265622 – 836.96<br>0212265344 – 3,056.90<br>0212263973 – 2,589.47<br>0212265166 – 3,014.77<br>0212263170 – 2,983.33<br>0212265611 – 1,609.02<br>0212265610 – 1,240.85<br>0213154453 – 1,976.11 | 17,307.41 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | January 17 | Register General | 2021 ஆம் ஆண்டு டெல்கந்த காணிப்பதிவகத்தின் முத்திரைத் தீர்வை பதிவு செய்தல் கட்டணத்தை பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு மீளளிக்கும் வகையில் | 300.00 |
| 12 | January 20 | Kestrel Services (Private) Limited | தனியார் பாதுகாப்புச்சேவை 2022 இற்கான கேள்வி வைப்புப் பணத்தினை மீளளிக்கும் வகையில் | 5,000.00 |
| 13 | January 21 | Advanced Technology Systems | கணணி திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,800.00 |
| 14 | January 22 | Managing Director, Golden Eagle.K.T.(Pvt) Ltd | தனியார் பாதுகாப்புச்சேவை 2022 இற்கான கேள்வி வைப்புப் பணத்தினை மீளளிக்கும் வகையில் | 5,000.00 |

| தொ. இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | 01 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 24 அலுவலர்களுக்கான விசேட முற்பணம் வழங்கும் வகையில் (24*4000) | 96,000.00 |

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :- 1278/17.02.2023**

**FTTH Connection இற்கு அனுமதி வழங்கல்.**

UNDP – CDLG செயற் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகின்ற **FTTH Connection** இனை வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்குவதுடன் CDLG திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமான நிதியினை எமது சபை நிதியிலிருந்து கொடுப்பனவு செய்ய அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திருமதி.கு.இராஜேஸ்வரி

**தீர்மான இல :- 1279/17.02.2023**

**அலுவலகத்தில் CDLG திட்டத்தின் கீழ் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகுவசதியினை (Ramp) ஏற்படுத்துதல் தொடர்பானது :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்னால் CDLG திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 200,000.00 இல் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே சபை அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் அதனை சுற்றுநிருபத்திற்கமைவாக முழுமைப்படுத்துவதற்கு குறித்த நிதி ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக நிதி தேவைப்படுவதனால் அந்நிதியினை சபை நிதியில் வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :- 1280/17.02.2023**

**தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்தில் மலசலகூடம், குளியலறை என்பவற்றை அமைத்தலுக்கான அனுமதி :**

உலக வங்கியின் அனுசரணையில் LDSP –PT-II நிதி ஒதுக்கீட்டில் (ரூபா 400,000.00) தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்தில் உக்காத கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட களஞ்சிய அறையை முழுமைப்படுத்துவதற்கேதுவாக அறையுடன் இணைந்ததாக மலசலகூடம் மற்றும் குளியலறை என்பவற்றினை அமைப்பதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :- 1281/17.02.2023**

**குறைநிரப்பு அனுமதி :**

LDSP திட்டத்தின் கீழ் BT I, BT II, BT III ஆகிய வேலைத்திட்டங்களில் கடமை ஆற்றிய உத்தியோகத்தர்களுக்கான மேற்பார்வை கொடுப்பனவு ரூபா 192,251.64 விடுவிக்கப்பட்டுள்ளது. பாதீட்டில் குறித்த திட்டத்திற்கு அடையாள ஏற்பாடு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் குறித்த தொகைகளை பின்வருமாறு குறைநிரப்பு செய்ய அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| **வருமானத்தலைப்பு** | **செலவீனத்தலைப்பு** |
|---|---|
| 3-1-380(ஈ) LDSP நிதி | 3-3-520(ஈ) LDSP நிதி |
| + 192,251.64 | +192,251.64 |

முன்மொழிந்தவர்:- திரு.மு.ஆனந்தராசா வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :1282/17.02.2023**

**நாட்குறிப்பு அனுமதி :**

**2022 ம் ஆண்டின் இறுதிக்கணக்கு தயாரிக்கும் பொருட்டு கீழ்வரும் நாட்குறிப்புக்களை கணக்குகளில் சேர்ப்பதற்கான அனுமதி.**

2022 ம் ஆண்டின் இறுதிக்கணக்கு தயாரிக்கும் பொருட்டு கீழ்வரும் நாட்குறிப்புக்களை கணக்குகளில் சேர்ப்பதற்கான அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நாட்குறிப்பு 2022

| திகதி | நாட்குறிப்பு இலக்கம் | விபரம் | ரூபா வரவு | ரூபா செலவு |
|---|---|---|---|---|
| 10.01 .2023 | 03 | வாக்குப்பண பேரேட்டுக்கணக்கு 3-1-380(ஈ)<br>வருமான செலவுக்கணக்கு 3-3-520(ஈ)<br>(CDLG project மூலம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற மூலதனப் பொருட்களை கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 295,886.00 | 295,886.00 |
| 10.01 .2023 | 04 | அலுவலக உபகரணங்கள் கணக்கு<br>மூலதன அரசிறை உதவுதொகைக் கணக்கு | 295,886.00 | 295,886.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (CDLG project மூலம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற மூலதனப் பொருட்களை (Smart Android TV,Lenovo Tab, Leveling Equipment) சொத்தாக்கம் செய்யும்வகையில்) | | | |
| **10.01 .2023** | **05** | பராயமடையாதோர் நிலையான வைப்புக்கணக்கு | | 8,351.48 | |
| | | நானவீத வைப்புக்ணக்கு | | | 8,351.48 |
| | | (எமது நகராட்சி மன்றத்தில் கடமையாற்றி காலஞ் சென்ற சுகந்தன் என்பவரின் மகனின் பெயரிலுள்ள (திகழவன்) நிலையான வைப்பு தொடர்பான 2022ஆம் ஆண்டிற்குரிய வட்டித்தொகையினை நாட்குறிப்பின் மூலம் கணக்கேடுகளில் சேர்க்கும் வகையில்) | | | |
| | | **செல்வன். சுகந்தன் திகழவன் - 2-0032-03-73605** | | | |
| **10.01 .2023** | **06** | நிலையான வைப்புக்கணக்கு | | 3,953,404.02 | |
| | | நெற்கொழு விளையாட்டரங்கு கணக்கு | | | 105,988.70 |
| | | பொது நூல்நிலையக்கணக்கு | | | 6,036.21 |
| | | கலாச்சார நிலைய மண்டப கணக்கு | | | 57,638.51 |
| | | முக்கிராவத்தை | | | 10,872.82 |
| | | அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டுக் கணக்கு | | | 2,168,097.80 |
| | | வட்டி வருமானக்கணக்கு (With Interest) | | | 1,601,028.71 |
| | | தீருவில் பூங்கா கம்பி | | | 3,741.27 |
| | | (குறித்த நோக்கத்திற்காக (ஆழ்நிதி) உருவாக்கப்பட்ட வைப்புக்களின், வட்டியுடன் கூடிய நிலையான வைப்புக்கணக்கில் இடப்பட்ட அபிவிருத்திக்கான வைப்புகளின் (அபிவிருத்தி ஒதுக்கம்),வட்டியுடன் மீள்புதுபிக்கும் நிலையான வைப்புக்களின் வட்டியினை கணக்குகளில் (with interest) சேர்க்கும் வகையில்) | | | |
| | | **நிலையான வைப்பு கணக்கு இல 01.01.2022ல் மீதி** | **31.12.2022ல் மீதி** | | **வட்டி** |
| | | 141-60-01-00010453-7 நெற்கொழு 1,105,040.69 | 1,157,773.88 | 1,263,762.58 | 105,988.70 |
| | | 141-60-01-00010458-21 பொதுநூல் நிலையம் 62,933.68 | 65,936.91 | 71,973.12 | 6,036.21 |
| | | 141-60-01-00010457-3 கலாச்சார மண்டபம் 600,940.41 | 629,617.65 | 687,256.16 | 57,638.51 |
| | | 141-60-01-00004976-8 முக்கிராவத்தை 187,381.69 | 197,687.68 | 208,560.50 | 10,872.82 |
| | | 2-0032-09-34186 தீருவில் பூங்கா கம்பி 64,630.00 | 68,023.08 | 71,764.35 | 3,741.27 |
| | | | | | **184,277.51** |
| | | 141-60-01-00010448-5 அபிவிருத்தி ஒதுக்கம் 5,350,579.10 | 5,605,837.06 | 6,151,598.94 | 545,761.88 |
| | | 141-60-01-00010461-7 அபிவிருத்தி ஒதுக்கம் 6,134,822.48 | 6,423,577.54 | 7,096,919.76 | 673,342.22 |
| | | 2-0032-07-76122 அபிவிருத்தி ஒதுக்கம் 4,381,826.24 | 4,585,193.00 | 4,585,193.00 | 474,496.81 |
| | | 2-0717-02-35903 அபிவிருத்தி ஒதுக்கம் 4,381,826.24 | 4,585,193.00 | 5,059,689.81 | 474,496.89 |
| | | | | | **2,168,097.80** |
| | | 141-60-01-00010449-4 With Interest 2,353,344.97 | 2,454,344.27 | 2,754,080.71 | 299,736.44 |
| | | 141-60-01-00010450-0 With Interest 4,104,913.98 | 4,280,093.07 | 4,767,402.33 | 487,309.26 |
| | | 141-60-01-00010451-9 With Interest 4,104,913.98 | 4,280,093.07 | 4,776,806.53 | 496,713.46 |
| | | 2-0032-09-12638 with Interest 2,779,882.04 | 2,912,495.98 | 3,229,765.53 | 317,269.55 |
| | | | | | **1,601,028.71** |
| | | | | | **3,953,404.02** |
| **10.01** | **07** | வருமான நிலுவை கணக்கு | | 1,033,667.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| .2023 | | வருமான கணக்கு<br>(2021ம் ஆண்டின் இறுதியில் வருமதியாக உள்ள நீதிமன்றத்தண்டப்பணத்தின் பட்டியல் தொகையை கணக்குகளில் சேர்க்கும் வகையில்)<br>நீதி மன்ற தண்டப்பணம் October2021 - December2021 | | 1,033,667.00 |
| 10.01 .2023 | 08 | மூலதன அரசிறை உதவுதொகை கணக்கு<br>தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு<br>அலுவலக உபகரண கணக்கு<br>(2020ல் இருப்புக் கணிப்பின்போது நீக்கப்பட்ட, விற்கப்பட்ட சொத்துக்களை சொத்திலிருந்து நீக்கும் வகையால்) | 531,715.00 | 26,000.00<br>505,715.00 |
| | | **தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு**<br>Table - Office Steel -02 | 26,000.00 | 26,000.00 |
| | | **அலுவலக உபகரண கணக்கு** | | |
| | | Mammotty -04 | 3,000.00 | |
| | | Rake -04 | 4,165.00 | |
| | | Computer - Mouse -05,CPU -05, - Key Board- 05,Monitor- 05 | 467,000.00 | |
| | | Computer -UPS -04 (4800.00,4000.00*3=12000.00) | 16,800.00 | |
| | | Rubber Stamp - Chairman -04 (4*400.00, 2*800.00) | 3,200.00 | |
| | | Rubber Stamp - Secretary -06 (2*400.00,4*900.00) | 4,400.00 | |
| | | Rubber Stamp - Secretary -02 (1*350.00,1*900.00) | 1,250.00 | |
| | | Pen Drive 2*1350,2*1200,800 | 5,900.00 | |
| | | **Total** | | **505,715.00** |
| 10.01 .2023 | 09 | ஆதன வரி கொடுத்த கழிவுக் கணக்கு<br>ஆதனவரிக் கணக்கு<br>(ஆதனவரி அறவீட்டின்போது வழங்கப்பட்ட கழிவை கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 197,897.97 | 197,897.97 |
| 10.01 .2023 | 10 | ஆதனவரி கணக்கு<br>ஆதனவரி நிலுவைக் கணக்கு<br>(இவ்வாண்டு அறவீடு செய்யப்பட்ட கடந்த ஆண்டுக்களுக்கான ஆதன வரி நிலுவையை கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 3,179,255.29 | 3,179,255.29 |
| 10.01 .2023 | 11 | ஆதனவரி நிலுவைக் கணக்கு<br>ஆதனவரி கணக்கு<br>(2022ம் ஆண்டு அறவிட வேண்டிய ஆதன வரியினை கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 2,921,256.68 | 2,921,256.68 |
| 10.01 .2023 | 12 | காணி கட்டடக் கணக்கு<br>மூலதன அரசிறை உதவுதொகை கணக்கு<br>(LDSP நிதியிலிருந்து திண்மக்கழிவு காணியில் களஞ்சிய அறை அமைத்தலுக்கான கொடுப்பனவு தொகையினை சொத்தாக்கம் செய்யும் வகையில்) | 4,852,984.43 | 4,852,984.43 |

| **விபரம்** | 01.01.2022இல் மீதி | 31.12.2022இல் மீதி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|---|
| | | 7,655,800.00 | |
| **திண்மக்கழிவு காணி தொண்டமனாறு** | 7,655,800.00 | 4,852,984.43 | 4,852,984.43 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.01 .2023 | 13 | பொறித்தொகுதியும் இயந்திர உபகரணங்கள் கணக்கு | 285,450.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலக உபகரணக் கணக்கு | 1,515,600.00 | |
| | | தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு | 784,182.00 | |
| | | மூலதன அரசிறை உதவுதொகைக் கணக்கு | | 2,585,232.00 |
| | | (LDSP நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பின்வரும் அலுவலக சொத்துக்களினை சொத்தாக்கம் செய்யும் வகையில்) | | |
| | | **பொறித்தொகுதியும் இயந்திர உபகரணங்களும்** | | |
| | | V.Service Machine Fm-550 | 95,000.00 | |
| | | Chainsaw Machine | 75,000.00 | |
| | | Welding Plant | 45,000.00 | |
| | | Hand Saw Machine | 32,950.00 | |
| | | Caf of Machine | 37,500.00 | 285,450.00 |
| | | **அலுவலக உபகரணங்கள்** | | |
| | | Dinner | 13,500.00 | |
| | | 13 enchvine | 22,500.00 | |
| | | Ainnet Set | 3,500.00 | |
| | | Hand Planner | 19,500.00 | |
| | | Seet Cutter | 16,500.00 | |
| | | Spanner 12 | 1,500.00 | |
| | | Nine wrnch 18 | 3,950.00 | |
| | | Pine wrnch 36 | 8,500.00 | |
| | | hammer | 1,750.00 | |
| | | Hp 1 Set | 2,400.00 | |
| | | Chsel Set | 6,500.00 | |
| | | Save Set | 13,500.00 | |
| | | Huned Set | 6,500.00 | |
| | | Spring Slaider | 210,000.00 | |
| | | Garden Swing | 95,000.00 | |
| | | 06 Seat Circular See Saw | 127,000.00 | |
| | | Rainbow Ladder | 57,000.00 | |
| | | Water Tank 2*44500.00 | 89,000.00 | |
| | | Baral Stand 3*110000.00 | 330,000.00 | |
| | | Empty Bottle Collector 5*97500.00 | 487,500.00 | 1,515,600.00 |
| | | **தளபாடங்கள் பொருத்துக்கள்** | | |
| | | Glass Half Door Cupboard 2*48910.00 | 97,820.00 | |
| | | Office Cupboard | 14,697.00 | |
| | | High Back Chair 2*21500 | 43,000.00 | |
| | | Conference Table | 72,050.00 | |
| | | Visitor Chair 5*14155 | 70,775.00 | |
| | | Office Main Table | 28,980.00 | |
| | | Computer Table | 16,910.00 | |
| | | Filling Rack 10*15550 | 155,500.00 | |
| | | Almyray 6*3 | 134,450.00 | |
| | | Work Shop Table 8*4 | 150,000.00 | 784,182.00 |
| **10.01 .2023** | **14** | காணி கட்டடக் கணக்கு | 490,950.00 | |
| | | அலுவலக உபகரணக் கணக்கு | 1,220,701.00 | |
| | | தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு | 62,000.00 | |
| | | நூலகப் புத்தகங்கள் கணக்கு | 56,338.00 | |
| | | மூலதன அரசிறை உதவுதொகைக் கணக்கு | | 1,829,989.00 |
| | | (பின்வரும் அலுவலக சொத்துக்கள் இவ்வாண்டு கொள்வனவு செய்யப்பட்டவற்றை சொத்தாக்கம் செய்யும் வகையில்) | | |
| | | **காணி கட்டடம்** | | |
| | | Curtin 1Feet-2,450.00 | 490,950.00 | 490,950.00 |
| | | **அலுவலக உபகரணங்கள்** | | |
| | | Rubber stamp -4*1,400.00 | 5,600.00 | |
| | | Stapler DS-45 10*450.00 | 4,500.00 | |
| | | Stapler -01 | 4,100.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | Puncher 10*470.00 | 4,700.00 | |
| | | Calculater DJ-120 D 3*3,150.00 | 9,450.00 | |
| | | Computers -(02*268,000.00) | 536,000.00 | |
| | | Wheel Barrow (3*6,500.00,5*9,500.00) | 67,000.00 | |
| | | Spring Pipe | 44,000.00 | |
| | | Notice Board 5*4 | 20,000.00 | |
| | | Shovel 3*950.00 | 2,850.00 | |
| | | Rake 10*950.00 | 9,500.00 | |
| | | Fan Bajaj 5*18,500.00 | 92,500.00 | |
| | | Mommoty 4*2050.00 | 8,200.00 | |
| | | Class Sticker Notice Board 5*4 | 19,500.00 | |
| | | White Board Stand | 10,000.00 | |
| | | White Board 4*3 | 5,040.00 | |
| | | Name Board (3*6,700.00,7*6,000.00,6,200.00,3*4,500.00) | 72,800.00 | |
| | | Barrel Pump | 6,500.00 | |
| | | Book | 1,000.00 | |
| | | Balancing Bridge | 94,711.00 | |
| | | New Merry Go Round | 106,000.00 | |
| | | Tow Pramid | 96,750.00 | 1,220,701.00 |
| | | **தளபாடங்கள் பொருத்துக்கள்** | | |
| | | Podium | 40,000.00 | |
| | | Key Board | 22,000.00 | 62,000.00 |
| | | **நூலக புத்தகங்கள்** | | |
| | | **Books -78** | 56,338.00 | 56,338.00 |
| **17.02 .2023** | **15** | காணி கட்டடக் கணக்கு<br>மூலதன அரசிறை உதவுதொகை கணக்கு<br>(ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்தவகையில் அதன் போதான விலகல்களை கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 106,763,986.77 | 106,763,986.77 |

| **விபரம்** | **01.01.2021இல் மீதி** | **31.12.2021இல் மீள் மதிப்பீட்டின் பின்னரான மீதி** | **மீள் மதிப்பீட்டு அதிகரிப்பு/ குறைவு** |
|---|---|---|---|
| மரக்கறிச் சந்தை காணி (ஆனைவிழுந்தான்) | 802,000.00 | | |
| மரக்கறிச்சந்தைகாணி(ஆனைவிழுந்தான்) | 200,000.00 | | 7,612,000.00 |
| மரக்கறிச் சந்தை காணி | 6,610,000.00 | | |
| மரக்கறிச் சந்தை கட்டடம் Block A | 26,677,385.00 | 4,920,000.00<br>57,690,000.00 | **35,932,615.00** |
| அலுவலக காணி கட்டடம் | 25,316,628.23 | 6,880,000.00<br>29,380,000.00 | **10,943,371.77** |
| நவீன சந்தைக் காணி கட்டடம் | 25,500,000.00 | 30,800,000.00<br>42,650,000.00<br>18,950,000.00<br>600000 | **67,500,000.00** |
| **மீள் மதிப்பீட்டின் போதான விலகல்** | | | **106,763,986.77** |

| | | | | |
|---|---|---|---|---|
| **17.02 .2023** | **16** | மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் கணக்கு<br>மூலதன அரசிறை உதவுதொகை கணக்கு<br>(NP HI 7016 இலக்க உழவு இயந்திரப் பெட்டிக்குரிய திருத்தம் 2021ம் ஆண்டு சில்லறை கடன் கொடுநர் கணக்கு மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. இது சென்ற வருடம் கணக்குகளில் சேர்க்கப்படாமையினால் இவ் வருடம் கணக்குகளில் சேர்க்கும் வகையில்) | 146,750.00 | 146,750.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| **17.02 .2023** | **17** | மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் கணக்கு<br>மூலதன அரசிறை உதவுதொகை கணக்கு<br>(LDSP நிதிமூலம் NP LW 0677 இலக்க Nissan Ambulance க்குரிய திருத்தம் ரூபா.1500000.00 தொகையினை சொத்தாக்கம் செய்யும் வகையில்) | 1,500,000.00 | 1,500,000.00 |
| **17.02 .2023** | **18** | பொதுக்களஞ்சியப்பொருள் கணக்கு<br>வருமான செலவுக்கணக்கு<br>(2021.12.31ல் காணப்பட்ட பொதுக்களஞ்சியப் பொருட்களை 2022ன் ஆரம்பத்தில் பயன்படுத்திய வகையிலும் 2022ம் ஆண்டில்<br>கொள்வனவு செய்யப்பட்ட களஞ்சியப்பொருட்களில் ஆண்டிறுதியில் கையிருப்பாக உள்ளவற்றை இருப்புக் கணக்கில் சேர்க்கும் வகையில்)<br>**01.01.2022ல் இருப்பு** **31.12.2022ல் இருப்பு**<br>**901,315.20** **931,046.16** | 29,730.96<br>**பயன்படுத்தாதது**<br>**29,730.96** | 29,730.96 |

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :- 1283/17.02.2023**

**ஆதனவரி செலுத்துதல் பற்றுச்சீட்டு தொடர்பானது :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் கடந்த காலங்களில் ஆதனவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை ஆதன உரிமையாளர் மற்றும் ஆதனப்பதிவேட்டு உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட உரிய ஆதனத்திற்கான பதிவு செய்யப்பட்ட அற்றோனிக் தத்துவம் உடையோர் மாத்திரம் பெற்றுக்கொள்ள அனுமதியளிப்பதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1284/17.02.2023**

**2023 ஆண்டு சபைநிதி வேலைத்திட்ட மாற்றம் தொடர்பானது :**

2023 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சபைநிதியினூடாக உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசா அவர்கள் தமது சுய விருப்பின் அடிப்படையில் தம்மால் முன்மொழியப்பட்ட சிவபுர வீதி நடைபாதை அமைத்தல் வேலைத்திட்டத்தினை மாற்றி பழைய ஆஸ்பத்திரி வீதியில் கழிவுநீர் தேங்கி நிற்காது வழிந்தோடக்கூடியவாறு வடிகால் நீர் அமைப்பினை அமைக்க பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1285/17.02.2023**

**2022 ஆண்டு சபைநிதி வேலைத்திட்ட மாற்றம் தொடர்பானது :**

2021 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஒதுக்க செயற்றிட்டமான கந்தசாமி கோயில் ஒழுங்கை வீதி புனரமைப்பு மற்றும் வடிகாலமைப்பினை முழுமையாக நிறைவேற்றுவதற்கு மேலதிகமாக

தேவைப்படுகின்ற ரூபா 50,000.00 இனை தவிசாளர் திரு.இ.சுரேனுடைய சுயவிருப்பின் அடிப்படையில் இவ்வருடத்திற்கான அவரது சபை நிதி வேலையிலிருந்து மாற்றம் செய்ய அனுமதிப்பதென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1286/17.02.2023**

**வல்வெட்டித்துறை அஞ்சலகத்திற்கு நிரந்தர கட்டடம் வழங்குதல் தொடர்பானது :**

வல்வெட்டித்துறை அஞ்சலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதுடன் கட்டட உரிமையாளர் கோருகின்ற போது தற்போது இருக்கின்ற கட்டடத்திலிருந்து இடம்மாற வேண்டிய நிலை தோன்றுமாயின் அதனால் அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களும் அவர்களது சேவையினைப் பெறுகின்ற மக்களும் அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும் என்பதனால் நகராட்சிமன்றத்தினுள் நிரந்தர கட்டடமொன்றினை வழங்க கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டமை சாதகமாக பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான கட்டடம் கிடைக்கின்ற பட்சத்திலோ அன்றி நிலக்கொள்வனவு நகரசபையினால் செய்யப்படும் போது, அவர்களுக்கு அதனை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்